முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்2023, செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர் ஊராட்சி, வி.ஐ.டி.கல்லூரியில் நடைபெற்ற செங்கல்பட்டு மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஆராமுதன் உள்ளனர்.

‘அண்ணா மேம்பாலம் 50’ கொண்டாட்டம்! சென்னையில்

கலைஞரின் பெரும் முயற்சியில் கட்டப்பட்ட முதல் மேம்பாலம்!

‘இந்து தமிழ் திசை’ நாளிதழ் தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 1-

சென்னையின் முக்கிய அடையாளமாகத் திகழும் அண்ணா மேம்பாலம் கட்டி 50 ஆண்டுகள் நிறைவடையும் வேளையில் கத்திப்பாரா மேம்பாலம் உட்பட சென்னை நகரெங்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பெரும் எண்ணிக்கையிலான மேம்பாலங்களை கட்டியது தி.மு.க. அரசு தான் என ‘இந்து தமிழ் திசை’ நாளிதழ் 30.6.2023 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்க விவரம் வருமாறு:-

இந்து தமிழ்

தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்கு உதவிய மேம்பாலம்

சென்னையின் முக்கிய அடையாளமாகத் திகழும் அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடையும் தருணத்தில், தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதிகள் மேம்பட்டிருப்பதில் மேம்பாலங்களின் பங்களிப்புக் குறித்துப் பேசப்பட வேண்டியது அவசியம்.

சாலைகள், நெடுஞ்சாலைகள், இருப்புப் பாதைகள் மீது பல அடி உயரத்தில், மேம்பாலங்கள் கட்டப் படுகின்றன. போக்குவரத்துப் பிரச்சினை, பயண நேரத்தைக் குறைக்க, விபத்து களைத்தவிர்க்க மேம்பாலங்கள் மிக முக்கியமான கண்ணிகளாக விளங்குகின்றன. ஒன்றுக்கும் மேற்பட்ட சாலைகள் குறுக்கிடும் பகுதிகளில் கட்டப்படும் மேம்பாலங்கள் பெரும் பலனளிக் கக்கூடியவை. அந்தந்த இடத்தின் தேவையைப் பொறுத்து வெவ்வேறு விதமான மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சராக மு.கருணாநிதி பதவி வகித்த காலத்தில், சென்னை அண்ணா சாலையின் முக்கியச் சந்திப்பான ‘ஜெமினி சர்க்கி’ளில் ‘அண்ணா மேம்பாலம்’ கட்டப்பட்டது. சாலை வசதி, வாகன வசதி போன்றவற்றில் பிரச்சினை கள் இருந்த நிலையிலும் அரசியல் நிகழ்ச்சிகள், சுயமரியாதைத் திருமணங்கள் எனப் பொதுநிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்துகொள்ளும் தன்மை கொண்டிருந்தவர் அண்ணா.

அந்தப் பிரச்சினைகளிலிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்க அவரும், அவருக்குப்பின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கருணாநிதியும் பெரும் முயற்சி எடுத்தனர். அதன் பலனாக அமைந்ததுதான் அண்ணா சாலை மேம்பாலம். சென்னையின் முதல் மேம்பாலம் என்னும் பெருமையைக் கொண்ட இந்தப் பாலம், தலைநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான முதல் புள்ளியாக அமைந்தது. இதைத் தொடர்ந்து, வெவ்வேறு கால கட்டங்களில், கோயம்பேடு ரவுண்டானா மேம்பாலம், பாடி மேம்பாலம், மதுரவாயல் மேம்பாலம் எனச் சென்னையில் பல மேம்பாலங்கள் கட்டப்பட்டன. இந்தப் பணியில் இரண்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சிகள் பங்களித்திருக்கின்றன என்றாலும், கூடுதல் முனைப்புக் காட்டியது தி.மு.க. அரசுதான்.

பிரம்மாண்டமான கத்திப்பாரா மேம்பாலம் கட்டப்பட்டதும் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில்தான். வாகனங்களின் எண்ணிக்கையில், டெல்லிக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருக்கும் சென்னை மாநகரில், பல்வேறு அம்சங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேம்பாலக் கட்டுமானங்கள் பேருதவி புரிந்திருக்கின்றன. கடந்த சில பத்தாண்டுகளில், சென்னைக்கு வெளியில் மதுரை,கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி தொடங்கி, பிருமாண்டமான நகரங்களில் தரமான மேம்பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தொழில் துறையில் தமிழ்நாடு பெரும் உயரங்களைத் தொட்டிருப்பதற்கு, சாலைப்போக்குவரத்து வசதியில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடும் முக்கியக் காரணி ஆகும். இத்தனை சிறப்புகளுக்கும் ஆரம்பப் புள்ளியாக அமைந்த அண்ணா மேம்பாலத்தைத் திராவிடத் தன்மையுடன் புதுப்பிக்கும் பணிகள் ஒருபுறம் நடைபெறுகின்றன. இன்னொருபுறம், புதிய மேம்பாலங்களுக்கான பணிகளும் தொடங்கப்படுகின்றன. இப்படியான முயற்சிகள் தொடர வேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஏற்ப, தமிழ்நாடு முழுவதும் சாலை, பாலம், மேம்பால வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கான தருணமாக ‘அண்ணா மேம்பாலம்50’ கொண்டாட்டத்தைத் தமிழ்நாடு அரசு பயன்படுத்தும் என நம்புவோம்!

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் செந்தில்பாலாஜி நீக்கமும், நிறுத்தமும் செய்து கோமாளித்தனம்:

ஆளுநரை உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப் பெற்றிட வேண்டும்!

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜூலை 1-

அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை அமைச்சரவையில் இருந்து நீக்குவதாக அறிவித்து, 5 மணி நேரத்தில் தனது அறிவிப்பை நிறுத்தி வைப்பதாக அறிவித்ததன் மூலம் கோமாளித்தனமாக செயல்பட்டு, ஆளுநர் பதவியை கேலிக் கூத்தாக்கி உள்ளார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். ஆளுநரின் இந்த செயல்பாடு வன்மையான கண்டனத்திற்குரியதாகும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் தெரிவித்துள்ளார்.

அவர் அறிக்கையில் கூறியுள்ளதாவது :-

ஒன்றிய அரசின் அடாவடித்தனமான செயலால் அமைச்சர் செந்தில்பாலாஜி மீது அமலாக்கத்துறை எடுத்த நடவடிக்கையால் மன உளைச்சலுக்கு ஆளாகி, இதய அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் இலாகா இல்லாத அமைச்சராக நீடிக்க தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த நிலையில் அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி அவர்களை நீக்குவதாக நேற்று மாலை ஆளுநர் ரவி அவர்கள் அறிவித்தார். இதற்கு ஆளுநர் கூறும் காரணம் அவர் மீது அமலாக்கத் துறை வழக்கு உள்ளது. ஆகவே இந்த நடவடிக்கை என்று அறிவித்துள்ளார்.

அப்படியானால் ஒன்றிய அமைச்சரவையில் உள்ள 72 அமைச்சர்களில் ஏறத்தாழ 33 அமைச்சர்கள் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளனவே, அவர்கள் மீது மோடி அரசு எடுத்த நடவடிக்கை என்ன? நேர்மையின் மறுவார்ப்பு பாஜக எனக் கூறிக் கொள்ளும் அந்த கட்சி, வழக்கு உள்ள ஒன்றிய அமைச்சர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? தமிழ்நாட்டு ஆளுநர் ரவி அவர்கள் இப்படி வழக்கு உள்ளவர்களை அமைச்சரவையில் நீடிக்க கூடாது. ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று உள்துறை அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்துள்ளாரா? அல்லது செய்வாரா? தமிழ்நாட்டில் தொடர்ந்து குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒற்றைக்குறிக்கோளில்தான் ஆளுநர் தன்னுடைய செயல்பாடுகளை வகுத்துக் கொண்டுள்ளார். இந்த அறிவிப்பு வந்தவுடன் அனைத்து கட்சிகளும், சட்ட வல்லுனர்களும், பொது மக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் ஐந்தே மணி நேரத்தில் தன் நிலையை மாற்றிக் கொண்டு தான் அறிவித்த அறிவிப்பை நிறுத்தி வைப்பதாக நள்ளிரவில் தெரிவித்துள்ளார்.

மத்தியில் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்த பின் குறிப்பாக பிரதமர் மோடி, அமித்ஷா கூட்டணி பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் தங்களது ஏஜெண்டுகளாக நியமிக்கப்படும் ஆளுநர்கள் மூலம் அந்த மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அந்த மாநில ஆட்சிகளின் நீடித்த நிலைத்த தன்மைக்கு கேடு விளைவித்து, அதிகாரிகள் மத்தியில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தி, மக்கள் நலப் பணிகளில் முட்டுக்கட்டையை உண்டாக்கி, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவது; அப்படி குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது தான் பாஜகவின் வேலையாக இருந்து வருகிறது. இதை உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக ஆர்வலர்கள் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அண்மையில் அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி அவர்கள் தனக்கு மிகப்பெரிய ஆதரவும் வரவேற்பும் அளிக்கப்பட்டதாக செய்திகள் வெளியிட ஏற்பாடு செய்தாலும் மறுபக்கத்தில் ஜனநாயகத்தை இந்தியாவில் நெருக்கடி ஆளாக்குவது, மதச்சார்பின்மையை கேள்விக்குறியாக்குவது போன்ற பிரச்சனைகள் குறித்து அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சமூக ஆர்வலர்களும் கண்டன குரல் எழுப்பியதை மறந்துவிட முடியாது. எனவே பாரதிய ஜனதா கட்சியின் நோக்கம் தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற வேண்டும். அதற்கு தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஆணி அடித்தார் போல் அமர்ந்துள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது ஆட்சியின் மீது குழப்பத்தை ஏற்படுத்திகளங்கத்தை உருவாக்கிட வேண்டும் என்கிற ஒற்றை இலக்கு தான் ஒன்றிய பாரதிய ஜனதா அரசுக்கும் அந்த கட்சிக்கும் உள்ளது. எனவே தான் ஆளுநர் அவர்கள் சட்டத்துக்கு புறம்பாக அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறி தன்னுடைய வரம்பு மீறி செயல்பட்டு வருகிறார். ஒரு அமைச்சரை நியமிக்கவும், நீக்கவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சியின் முதலமைச்சருக்கு மட்டுமே உள்ளது.

முதலமைச்சரின் தலைமையில் உள்ள அமைச்சரவையின் எண்ணத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டிய கடமை ஆளுநருக்கு உண்டு. அதை மீறி தாந்தோணித்தனமாக எந்த ஆளுநரும் செயல்பட முடியாது, செயல்படக்கூடாது என பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றங்களும் தீர்ப்பளித்து ஆளுநர்களின் செயல்கள் மீது குட்டு வைத்துள்ளது. அவற்றையெல்லாம் மீறி தமிழ்நாட்டு ஆளுநர் தொடர்ந்து தமிழ்நாடு அரசுக்கு எதிராக தொல்லைகளை கொடுத்து குழப்பத்தை ஏற்படுத்தி வருவது வன்மையான கண்டனத்திற்குரியதாகும். ஆளுநர் செய்ய வேண்டிய வேலைகளை செய்யாமல் தேவையற்ற வேலைகளில் நேரத்தை செலவழிப்பது வீண் வேலையாகும். குறிப்பாக அதிமுக ஆட்சி காலத்தில் அனுப்பப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு கூட இது வரை ஒப்புதல் அளிக்காமல் காலம் கடத்தி வருகிறார். அந்த கோப்புகளை பார்ப்பதற்கும் அதற்கு ஒப்புதல் அளிப்பதற்கும் நேரத்தை ஒதுக்காமல் இப்படி அரசியல் களத்தில் நடனம் ஆடிக் கொண்டிருக்கும் கவர்னரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன். அவரை உடனடியாக ஒன்றிய அரசின் பிரதமர் மோடி அவர்கள் திரும்ப பெற்றிட வேண்டும். அவர் தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தொடர்ந்து எதிர்ப்பாக, பாதகமாக செயல்பட்டு வருகிறார். தமிழ் மொழியின் பெருமையை சீர்குலைப்பது, சமூக நீதியை கெடுப்பது, மனுதர்மத்தை தூக்கிப்பிடிப்பது, இந்தி சமஸ்கிருதத்தை போற்றி பேசுவது இப்படி அவர் பதவியேற்ற காலம் தொட்டு தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக செயல்படுவதால் அவரை தமிழ்நாட்டு மக்கள் ஆளுநர் மாளிகையில் இருந்து விரட்டி அடிக்கும் காலம் ஏழுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி நீக்கம் செய்யக்கோரி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் துவக்கி வைத்தார். உடன் ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் நெமிலிச்சேரி மு.பாபு, தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், ம.தி.மு.க. மாவட்ட துணை செயலாளர் கே.எம்.வேலு, மதிமுக நகர செயலாளர் மணியரசு உள்பட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி மாநில மாவட்ட நகர நிர்வாகிகள் பலர் உள்ளனர் .

வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் நடந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார், பொருளாளர் நரசிம்மன், பகுதிச் செயலாளர்கள் வீ.ஜி.கே.சுந்தரவிஜி, முருகப் பெருமாள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு : பி.லோகநாதன் தலைமை! வினோத் வேலாயுதம் முன்னிலை!

ஆயிரம் விளக்கு மேற்கு - 109 ‘அ’ வட்டத்தில் 5 00 பேருக்கு நல உதவிகள்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை - நா.எழிலன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை 1-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி - 109 ‘அ’ வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு 500 ஏழை எளியோர்க்கு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

3.7.2023 - திங்கட்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் சூளைமேடு - பஜனைகோயில் மெயின் ரோடில் - பஜனை கோயில் எதிரில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு - முன்னாள் வட்ட அவைத் தலைவர் பி.லோகநாதன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார்.

ச.டேவிட் இன்பராஜ், க.தங்கமணி, பாண்டிசுரேஷ், இரா.முத்துக்குமார், ஆ.விஜயகுமார், ஜி.கே.ராஜா, எஸ்.மாலா, வாஞ்சிநாதன், ஆர்.நைனியப்பன், ஆர்.நீலகண்டன், என்.எஸ்.சுப்பிரமணி, ஆர்.சேகர், பி.கோவிந்தராஜன், பி.பிரபாகரன், கா.செல்வம், கி.மணி, க.அன்பழகன், மத்தியாஸ், எஸ்.மோகன்ராஜ், கிண்டி ஆர் செல்வம், ஆர்.பொன்னுரங்கம், ராம்குமார், நாகூர் ரபிக் மஜித், டி.சதீஷ்ராஜ், பி.என்.சந்திரசேகரன், இ.தாவுத் பாஷா, பி.டி.சி.சுரேஷ், சி.தங்கராஜ, டி.லாசர், பால்ரங்கநாதன், ஏ.எஸ்.சிவசாமி, எஸ்.ஐசக்ராஜ், எஸ்.என்.குமார், ஆர்.முருகையன், சின்மயா நகர், பொன்.வர.லோகு, சி.என்.கமல், எஸ்.சுந்தர், பாலன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நா.எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு, ஏழை எளியோர் 500 பேருக்கு நல உதவிகள் வழங்குகின்றனர்.

எஸ்.மோகன், நுங்கை வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ் டேனியல், து.விக்டர், வி.எஸ்.கலை, ஆர்.என்.துரை, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ஆர்.சங்கீதா, பா.பிரகாஷ், நுங்கை சுரேஷ், கே.குட்டி, ஜெ.எம்.எச்.இம்ரான், புவி.பாலாஜி, என்.பி.இதாயத் பாஷா,ஸ்டெர்லிங் மோகன், பா.கமலக்கண்ன், பொன்னம்மாள், க.சிட்டிபாபு, வரதை த.பரி, மு.மோகன், த.குணசேகரன், கே.எஸ்.தினேஷ் பிரபு, அ.குப்பன், த.ஐசன்ட், வி.என்.பாபு, எஸ்.பார்த்திபன், எம்.டி.ஆர்.புகழ், கே.தட்சிணாமூர்த்தி, என்.இ.சரணவன், க.சீனிவாசன் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

ஈ.லட்சுமணன் நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி நீக்கம் செய்யக்கோரி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆவடியில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், துணை மேயர் சூரியகுமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மதிமுக நிர்வாகி அந்திரிதாஸ்பகுதிச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், திமுக கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும்
மறைந்த மாவீரன்-மாவட்ட செயலாளர் தீரர்.ஜெ.அன்பழகன் 3ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு
சென்னை தென்மேற்கு மாவட்டம்-தியாகராயர்நகர் கிழக்கு பகுதி
135வது வட்டத்தில்
2 நாள் தொடர் மாபெரும் மின்னொலி கபடி போட்டி
நாள் : 1-7-2023 சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் 2-7-2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணி வரை
இடம் : புதூர் அரசினர் மேல்நிலை பள்ளி, 3வது அவென்யூ, அசோக்நகர், சென்னை-83.

மாண்புமிகு முதல்வர்-கழக தலைவர்
தளபதி மு.க.ஸ்டாலின்
அவர்களின் ஆணைக்கிணங்க...

கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் அறிவுறுத்தலின்படி...

தலைமை ▪ எம்.எஸ்.பழனி 135வது வட்ட கழகச் செயலாளர்
முன்னிலை ▪ மயிலை த.வேலு B.A.,LLB.,MLA., சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர்
திருமிகு ▪ தயாநிதிமாறன் MP., மாநில அமைப்பாளர் - விளையாட்டு மேம்பாட்டு அணி
முனைவர் ▪ தமிழச்சிதங்கபாண்டியன் MP., தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
ஜெ.கருணாநிதி MLA., தியாகராயர்நகர் கிழக்கு பகுதி செயலாளர்
கே.ஏழுமலை MC., தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர்
கோ.சு.மணி தலைமை செயற்குழு உறுப்பினர்
ராஜாஅன்பழகன் MC., செ.தெ.மே.மா.இளைஞர்அணி அமைப்பாளர்

வரவேற்புரை
V.P.S.ஜெனார்த்தா M.P.மாறன் புதூர் ஆர்.லோகு E.வடிவேல் T.மணிமாறன் V.P.S.ஜெயசீலன் L.அருண்குமார்
ராஜேஸ்வரி பரமசிவம் K.பாலாஜி M.அன்புரோஸ் S.சத்தியன் M.கஜேந்திரன் S.சந்தோஷ்குமார்

நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள்
நந்தனம் கி.மதி MC., மயிலை மேற்கு பகுதி செயலாளர்
மயிலை எஸ்.முரளி மயிலை கிழக்கு பகுதி செயலாளர்
சைதை எம்.கிருஷ்ணமூர்த்தி MC., 10வது மண்டலக்குழு தலைவர்
எஸ்.மோகன் ஆ.சந்திரசேகர் மு.சத்யா எம்.ஆறுமுகம் ஜெ.ஜானகிராமன் புலியூர் டி.மோசஸ் சா.தேவராசு
ஆர்.குமரன் ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் என்.எஸ்.பாலசுப்பிரமணியன் கே.சரவணன்
மு.செல்வகுமார் எம்.கே.மூர்த்தி மு.ம.செந்தில்குமார் G.P.செந்தில்குமரன் ஆர்.சக்திவேல் லலிதாபுரம் என்.துரை
எஸ்.லட்சுமிகாந்தன் D.கமல் ‘தட்சன்’ ஹரிஹரன் ந.மோ.முரளி கே.எஸ்.வெல்டிங்ராஜா பி.ஜெயக்குமார் பி.மாரி
மு.மணிவண்ணன் இரா.பொன்னிவளவன் எஸ்.புஸ்பா என்.ராமகிருஷ்ணன்
ப.சாந்திபங்காரு கோமதிமணிவண்ணன் MC., எஸ்.பாஸ்கர் MC., கார்த்திகாபாஸ்கர் MC., பாபாசுரேஷ் க.சந்துரு

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்கும்
A.ஆனந்த் (மாஸ்டர்) G.வடிவேல் M.பிரதாப் P.வினோத்

jagan ads 98417 02981

வடபழனி பிரதர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்-புதூர்
ஆனந்த் ஆடியோ & நவின் லைட்ஸ்
தொடர்புக்கு : 9087462996 / 7871688540 / 7010916588
நிகழ்ச்சி ஏற்பாடு. எம்.எஸ்.பழனி 135வது வட்ட கழகச் செயலாளர்
135வது வட்ட தி.மு.க தியாகராயர்நகர் கிழக்கு பகுதி